## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.16/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | மதம் | : இந்து |
| க/பெ | : தினகரன் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

08.01.2026

<u>பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4. வழக்கு சொத்தின் வகைப்பாடு என்ன என்றால் நத்தம் ஆகும். எனது மூதாதயர்கள் தாவா சொத்தில் குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யாத கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளோம். என் மாமியாருக்கு தகுதி சான்றிதழ் எந்த புல எண்ணில் கொடுக்கப்பட்டது என்றால் புல எண்.153/4I, 153/4J ஆகும். நான் சொல்வதுபோல் பி.வா.சா.ஆ 1 தகுதி சான்றிதழில் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு கண்ணாடி போடாமல் கண் சரியாக தெரியாது. எனவே என்னால் சொல்ல முடியாது. என் கணவர் அ.வ.எண்.12/2019ஐ தாக்கல் செய்துள்ளதாக சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 07.07.2025ல் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான்.

5. அதன்மீது நாங்கள் ஏதும் மேல்முறையீடோ மனுவோ தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. அந்த வழக்கில் வாதிக்கு 07.08.2018ல் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் வீடு தாவா சொத்தில் பின்புறம் உள்ளது என்றால் இல்லை. எங்களது புது வீட்டிற்கு பின்புறம்தான் வாதி வெங்கடேசனுக்கு வீடு உள்ளது. 21.07.2004ல் எங்களுக்கு பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்வதில் 2004ல் இருந்து

அ.வ.எண்.12/2019ஐ தாக்கல் செய்யும்வரை கிரைய ஆவணம் எழுதி பெற வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியோ அல்லது வேறு நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் எழுத்துப்பூர்வமாக கேட்கவில்லை. வாய்மொழியாகதான் கேட்டோம்.

6. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 13 ஆவணத்தில் பல திருத்தங்கள் உள்ளது என்றாலும் அது எங்களால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. எனது மூதாதயர் அனுபவித்து வந்ததாக நான் கூறியுள்ளதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து ரங்கசாமி த/பெ லேட். கோவிந்தனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ரங்கசாமி பெயரில் பட்டா எண்.319ல் பட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. ரங்கசாமியும் அவரது மனைவி ராஜம்மாள் இறந்த பின்பு வெங்கடேசன், ரேவதிக்கு சொத்து பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்தார்கள் என்றால் ரங்கசாமியின் பிள்ளைகள் அனைவரும் சேர்ந்துதான் எங்களுக்கு எழுதி கொடுத்தார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாய் மொழி பாகத்தில் வெங்கடேசன், ரேவதிக்கு சொத்து பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

7. வெங்கடேசன், ரேவதி இருவரும் 07.08.2018ல் பதிவு செய்த கிரைய ஆவணத்தை வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற நாள் முதல் வாதிதான் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். 10.11.2018ல் நான் தேவையற்று அவரது சொத்தில் அத்துமீறி பிரவேசித்தோம் என்றாலும் அதை வாதி தடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா என் கணவர் பெயரில் உள்ளது. வீட்டு வரி ரசீது என் பெயரில் உள்ளது. பத்திரமும் என் பெயரில் உள்ளது. மெத்து வீட்டின் கதவு எண் என்ன என்றால் 160A ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 16 முதல் 30 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது மாடி வீட்டிற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்றாலும் வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ 2 முதல் பி.வா.சா.ஆ 12 வரையிலான வீட்டு வரி ரசீதுகளும் பி.வா.சா.ஆ 16 முதல் 30 வரை ரசீதுகளும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 14 மின் கட்டண அட்டை வழக்கு சொத்திற்கான ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ 15லேயே வாதி கிரையம் பெற்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதனால்தான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். பி.வா.சா.ஆ 15ல் வரும் கிரையம் செல்லாது என்று நாங்கள் தாக்கல் செய்த வழக்கே தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் வாதியின் வழக்கு பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)